**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**<u>OS.139/2021</u>**

12.08.2025.

**<u>வா.சா.1. மகேந்திரன், த/பெ. திருநாவுக்கரசு அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

இந்த வழக்கு தாவா சொத்தானது எங்குள்ளது என்றால் - நீடாமங்கலம் கீழத்தெருவில் உள்ளது. கதவு எண். என்னவென்றால் - பழைய எண். 33 புதிய எண். 32. பிரதிவாதி எந்த கதவு எண்ணில் வசிக்கிறார் என்றால் - 33 பில் வசிக்கிறார்.. அதன் பழைய எண். 32 ஆகும். இந்த இரண்டு வீடுகளுக்கும் தெருவாசல் எந்த பக்கம் என்றால் - எனது வீட்டு வாசல் தெற்கு பக்கம், பிரதிவாதிக்கு மேற்கு பக்கம் உள்ளது. இந்த வழக்கின் விவரங்களை சொன்னது நான்தான் என்றால் - சரிதான். இந்த சொத்துக்கள் ஆரம்பத்தல் இராஜாங்கம் செட்டியாருக்கு சொந்தமானது என்றால் - சரிதான். இராஜாங்கம் செட்டியாருக்கு சொந்தமானது என்பதை காட்டுவதற்கு தான் வா.சா.ஆ.6 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரிதான். இராஜாங்கம் செட்டியார் எப்போது இறந்துபோனார் என்றால் - 40 வருடங்களுக்கு மேல் இருக்கும். அவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் - 3 பிள்ளைகள் திருநாவுக்கரசு, வீரமணி மற்றும் விஜயக்குமார். திருநாவுக்கரசு என் தகப்பனார். வீரமணி எனது சித்தப்பா என்றால் - சரிதான். இந்த வழக்கில் உறவுமுறைகள் குறித்து நான் சொல்லவில்லை என்றால் - சரிதான். இராஜாங்கம் செட்டியாரின் இறப்பிற்கு பிறகு எனது தந்தையும் அவரது உடன் பிறந்தவர்களும் பாகப்பிரிவினை செய்துக்கொண்டார்களா என்றால் - செய்துக்கொண்டார்கள். இராஜாங்கம் செட்டியாரின் மூத்த தாரத்தின் மகனான கல்யாணராமனும் எனது தாத்தா இராஜாங்க செட்டியாரும் 1963 ல் பாகப்பிரிவினை செய்துக்கொண்டார்கள். அந்த பாகப்பிரிவினை பத்திரம் வா.சா.ஆ.5 ஆகும். அதற்கு பின்னர் எனது அப்பா மற்றும் அவரது உடன் பிறந்தவர்களான வீரமணி மற்றும் விஜயகுமார் ஆகியோர்கள் 2012ம் ஆண்டு பாகப்பிரிவினை செய்துக்கொண்டார்கள் என்றால் - சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தினை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - சாட்சி இல்லை என்கிறார். ஏன் அந்த பத்திரத்தினை தாக்கல் செய்யவில்லை என்றால் - அந்த பத்திரத்தில் அளவு அதிகமாக உள்ளதால் தாக்கல் செய்யவில்லை. எனக்கு சாதகமான பத்திரங்களை மட்டும்இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் - எனக்கு தேவையான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு யார் விற்பனை செய்தது என்றால் - எனது பெரியப்பா கல்யாணராமன். எனது தாத்தா மற்றும் கல்யாணராமன் ஆ கியோர்கள் 2012ம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் யார் யார் தரப்பினர் என்றால் - என் அப்பா திருநாவுக்கரசு, விஜயக்குமார் மற்றும் வீரமணி. கல்யாணராமனுக்கு இந்த சொத்து எப்படி கிடைத்தது என்றால் - இராஜாங்கம் செட்டியாருக்கும் கல்யாணராமனுக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் மூலம் கிடைத்தது. 1963ம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள ஷரத்துக்கள் அனைத்தும் உண்மையானவை என்றால் - சரிதான். அந்த ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன் என்றால் - படித்துள்ளேன். அந்த பத்திரத்தில் யார் யாருக்கு என்ன்ன ஷெட்யூல் சொத்துக்கள் என்பது தெரியுமா என்றால் - சரியாக சொல்ல தெரியவில்லை. எனக்கும்

பிரதிவாதிக்கும் ஆதி உரிமையாளர் இராஜாங்க செட்டியார் தான் என்றால் - சரிதான். இராஜாங்கம் செட்டியாருக்கு 1959ம் ஆண்டு கிரய பத்திரம் மூலம் சொத்து கிடைத்தது என்று தான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் - சரிதான். 1959ம் ஆண்டு பத்திரத்தினை தாக்கல் செய்துள்ளேனா என்றால் - தாக்கல் செய்துள்ளேன்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுககு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.